முழுப்பதிப்புரிமையுடையது

அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை - 2022 (2023)

## 60 - வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்

## புள்ளி வழங்கும் திட்டம்



இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

kalvi.lk

## க.பொ.த (சாத.தர)ப் பரீட்சை - 2022 (2023)
## 60 - வணிகக்கல்வியும் கணக்கீடும்

| | | | |
|---|---|---|---|
| வினாப்பத்திரம் I | - 1 x 40 | = | 40 புள்ளிகள் |

வினாப்பத்திரம் II

| | | |
|---|---|---|
| வினா இலக்கம் 01 கட்டாயமானது | = | 20 புள்ளிகள் |

### பகுதி I வணிகக்கல்வி

| | | | |
|---|---|---|---|
| வினா இலக்கம் 2 | மொத்தப்புள்ளிகள் | = | 08 |
| வினா இலக்கம் 3 | மொத்தப்புள்ளிகள் | = | 08 |
| வினா இலக்கம் 4 | மொத்தப்புள்ளிகள் | = | 08 |

(ஏதாவது இரு வினாக்களுக்கு 02 x 08 புள்ளிகள்) = 16 புள்ளிகள்

### பகுதி II கணக்கீடு

| | | | |
|---|---|---|---|
| வினா இலக்கம் 5 | மொத்தப்புள்ளிகள் | = | 12 |
| வினா இலக்கம் 6 | மொத்தப்புள்ளிகள் | = | 12 |
| வினா இலக்கம் 7 | மொத்தப்புள்ளிகள் | = | 12 |

(ஏதாவது இரு வினாக்களுக்கு 02 x 12 புள்ளிகள்) = 24 புள்ளிகள்

மொத்தம் = 60 புள்ளிகள்

| | | |
|---|---|---|
| **வினாப்பத்திரம் I** | - | **40 புள்ளிகள்** |
| **வினாப்பத்திரம் II** | - | **60 புள்ளிகள்** |
| **இறுதிப்புள்ளிகள்** | - | **100** |



kalvi.lk


## க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2022 (2023)

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. சகல உதவிப் பரீட்சகர்களும் விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. பிரதம பரீட்சகர்கள் ஊதா நிறக் குமிழ் முனை பேனாவினை விடைத்தாள்களை புள்ளியிடுவதற்குப் பயன்படுத்தவும்.
3. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
4. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, ஒப்பம் இடவும்.
5. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.
6. எண்கணித பரீட்சகரினால் புள்ளிகள் பிழையற்றது என உறுதிப்படுத்த நீலநிற அல்லது கருப்புநிறப் பேனாவினை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**




(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள்**

01 **துளைத்தாள் தயாரித்தல்**

i. புள்ளி வழங்கும் திட்டத்தின் படி சரியான தெரிவைத் துளைத்தாளில் அடையாளமிடவும்.

ii. அவ்வாறு அடையாளமிடப்பட்ட இடத்தை வெட்டி நீக்கித் துளைத்தாளைத் தயாரிக்கவும்.

iii. துளைத்தாளை விடைகளின் மீது சரியாக வைத்துக்கொள்ளக்கூடியதாகச் சுட்டெண் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான விடைகளின் எண்ணிக்கையைக் காட்டும் அடைப்பையும் வெட்டி நீக்கவும்.

iv. சரியான, பிழையான விடைகளை குறிப்பிடக்கூடியதாக ஒவ்வொரு வரிசைக்கும் இறுதியில் வெற்று நிரையொன்றை வெட்டி ஏற்படுத்திக் கொள்ளவும்.

v. **வெட்டிக்கொண்ட துளைத்தாளில் பிரதம பரீட்சகரிடம் கையொப்பம் பெற்று அங்கீகரித்துக் கொள்ளவும்.**



kalvi.lk

2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை X அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் எழுதவும். அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை மற்றும் கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். **பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிட்டு பிழையிடவும் புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.**
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக **2 இலக்கங்களில் பதியவும்.** வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்தப் புள்ளிகளை கவனமாகக் கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் ஒவ்வொரு விடைக்கும் வழங்கப்பட்டுள்ள புள்ளிகளின் தொகையினை ஒவ்வொரு பக்கமாக கூட்டவும் அக்கூட்டுத்தொகை உங்களால் முன்பக்கத்தில் மொத்தம் எனக் குறிப்பிட்ட மொத்தப்புள்ளிகளுக்கு சமமானதா? என பரீட்சிக்கவும்.

*** புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

i. ஒருவினாப்பத்திரம் உள்ளபாடங்கள்தவிரஏனையசகலபாடங்களுக்குமான இறுதிப்புள்ளிகுழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது.
ii. ஒவ்வொரு வினாப்பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியான புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும்.
iii. வினாப்பத்திரம் I இற்கான புள்ளிப்பட்டியலில் "Total Marks" என்ற நிரலில் **பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும்.**
iv. வினாப்பத்திரம் II இற்கான புள்ளி பட்டியலினைத் தயார் செய்யும் போது பகுதிப்புள்ளிகளை பதிவதோடு வினாப்பத்திரம் II இன் இறுதிப்புள்ளியை புள்ளிப்பட்டியலின் "Total Marks" என்ற நிரலில் பதியவும்.
v. 43 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து **எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.**
vi. 21 - சிங்களமொழியும் இலக்கியமும், 22 - தமிழ்மொழியும் இலக்கியமும் ஆகிய இரு பாடங்களும் வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளிகளை புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். வினாப்பத்திரம் II, III இற்கான பகுதிப் புள்ளிகளை உள்ளடக்கி அவ்வினாப்பத்திரத்தின் மொத்தப் புள்ளிகளை புள்ளிப்பட்டியலில் பதிய வேண்டும்.

**முக்கியக் குறிப்பு :**

i. சகல சந்தர்ப்பங்களிலும் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் உரிய முழுப்புள்ளியானது **முழுத்தானத்தில்** வினாப்பத்திரம் I, II மற்றும் III என்ற புள்ளி பட்டியலின் உரிய நிரலில் உரிய வகையில் பதிதல் வேண்டும். எந்தவிதமான காரணங்களிற்காகவும் வினாப்பத்திரத்தின் இறுதிப்புள்ளியானது **தசம தானங்களில் அல்லது பின்னத்தில் பதியப்படலாகாது.**
ii. புள்ளிகளைப் பட்டியலில் சகல பக்கங்களிலும் புள்ளிகளை பதிந்த உதவிப் பரீட்சகர், புள்ளிகளைச் சரிபார்பார்த்த உதவி பரீட்சகர், புள்ளிகளை பரீட்சிக்கும் எண்கணித பரீட்சகர் (EMF) மற்றும் பிரதம பரீட்சகர் ஆகியோர் தமது குறியீட்டு இலக்கத்தை எழுதி கையொப்பமிட்டு உறுதிப்படுத்துவது கட்டாயமாகும்.

ooo



kalvi.lk

## 60 வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்
## புள்ளி வழங்கும் விதம்

| | | |
|---|---|---|
| வினாப்பத்திரம் I | = | 40 புள்ளிகள் |
| வினாப்பத்திரம் II | | |
| 1ம் வினா | = | 20 புள்ளிகள் |
| பகுதி I - 2 x 08 | = | 16 புள்ளிகள் |
| பகுதி II 2 x12 | = | 24 புள்ளிகள் |
| மொத்தப் புள்ளிகள் | = | 100 புள்ளிகள் |

உப பகுதிகளுக்குரிய புள்ளிகளைப் பதியும் போது தெளிவாக எழுத வேண்டும்.

உதாரணம்: i. $\frac{2}{2}$ ii. $\frac{1}{2}$ iii. $\frac{2}{2}$ iv. $\frac{1}{2} = \frac{06}{08}$

**வினாப்பத்திரம் II**

**1ம் வினா**

I புள்ளிகள் - 02
II புள்ளிகள் - 02
III புள்ளிகள் - 02
IV புள்ளிகள் - 02
V புள்ளிகள் - 02
VI புள்ளிகள் - 02
VII புள்ளிகள் - 02
VIII புள்ளிகள் - 02
IX புள்ளிகள் - 02
X புள்ளிகள் - 02

**மொத்தப் புள்ளிகள் 20**

### பகுதி – I
### வணிகக் கல்வி

**2ம் வினா**

I புள்ளிகள் - 02
II புள்ளிகள் - 02
III புள்ளிகள் - 02
IV புள்ளிகள் - 02

**மொத்தப் புள்ளிகள் 08**

**3ம் வினா**

I புள்ளிகள் - 02
II புள்ளிகள் - 02
III புள்ளிகள் - 02
IV புள்ளிகள் - 02

**மொத்தப் புள்ளிகள் 08**



kalvi.lk

**4ம் வினா**

I புள்ளிகள் - 02
II புள்ளிகள் - 02
III புள்ளிகள் - 02
IV புள்ளிகள் - 02

**மொத்தப் புள்ளிகள் 08**

## பகுதி II
## கணக்கீடு

**5ம் வினா**

I புள்ளிகள் - 02
II புள்ளிகள் - 02
III புள்ளிகள் - 04
IV புள்ளிகள் - 04

**மொத்தப் புள்ளிகள் 12**

**6ம் வினா**

I புள்ளிகள் - 02
II புள்ளிகள் - 02
III புள்ளிகள் - 04
IV புள்ளிகள் - 04

**மொத்தப் புள்ளிகள் 12**

**7ம் வினா**

I புள்ளிகள் - 02
II புள்ளிகள் - 02
III புள்ளிகள் - 08

**மொத்தப் புள்ளிகள் 12**


kalvi.lk

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**60 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2022(2023)
**General Certificate of Education (Ord. Level) Examination, 2022(2023)**

ව්‍යාපාර හා ගිණුම්කරණ අධ්‍යයනය I, II
**வணிகக் கல்வியும் கணக்கீடும் I, II**
**Business and Accounting Studies I, II**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

## வணிகக் கல்வியும் கணக்கீடும் I

அறிவுறுத்தல்கள் :

* எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
* 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
* உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.
* அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

● பின்வரும் சம்பவக் கற்கையை அடிப்படையாகக் கொண்டு 1 தொடக்கம் 5 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

பொறியியலாளரான ஆதியா தனது கலாநிதிப் பட்டப்படிப்பினை முடித்த பின்னர் 'றோஸ்வில்லா' அடுக்கு மாடிக் குடியிருப்பில் வசித்து வருகிறார். இவர் "விஜயா சோலார் பனல்" எனும் பெயரில் சூரிய சக்தி மூலம் மின்சாரம் பெறும் கலங்களைத் தயாரித்து விநியோகிக்கும் வணிகமொன்றை நடாத்தி வருகின்றார். இத் தயாரிப்புக்குத் தேவையான மூலப்பொருட்களை வரையறுத்த சன் பவர் (தனியார்) கம்பனியானது தொடர்ச்சியாக வழங்கி வருகிறது. சுசான் தயாரிப்பு நடவடிக்கைகளுக்கு உதவி செய்கின்றார். இத் தயாரிப்புக்கள் ரூபன் என்பவருக்குச் சொந்தமான "ரெக் சிற்றி" சிறப்புச் சந்தையின் விநியோகச் சங்கிலி மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

**1.** மேலே தரப்பட்ட சம்பவக் கற்கையில், ஆதியா தனது வீடமைப்புத் தேவையை நிறைவேற்றிக் கொண்டது,
(1) விஜயா சோலார் பனல் வணிகத்தின் மூலம் ஆகும்.
(2) ரெக்சிற்றி சிறப்புச் சந்தை மூலம் ஆகும்.
(3) வரையறுத்த சன் பவர் (தனியார்) கம்பனி மூலம் ஆகும்.
(4) றோஸ்வில்லா அடுக்குமாடிக் குடியிருப்பு மூலம் ஆகும்.

**2.** "விஜயா சோலார் பனல்" வணிகத்தின் புறச்சூழல் காரணிகளை மட்டும் உள்ளடக்கியுள்ள விடையைத் தெரிவுசெய்க.
(1) ஆதியா, ரெக்சிற்றி சிறப்புச் சந்தை
(2) ரூபன், வரையறுத்த சன் பவர் (தனியார்) கம்பனி
(3) சுசான், ரெக்சிற்றி சிறப்புச் சந்தை
(4) சுசான், வரையறுத்த சன் பவர் (தனியார்) கம்பனி

**3.** "ரெக் சிற்றி" சிறப்புச் சந்தையின் விநியோகச் சங்கிலியானது விஜயா சோலார் பனல் வணிகத்துக்கு,
(1) ஒரு பலம் ஆகும். (2) ஒரு பலவீனம் ஆகும்.
(3) ஒரு வாய்ப்பு ஆகும். (4) ஒரு அச்சுறுத்தல் ஆகும்.

**4.** ஆதியா வணிகத்தின் உற்பத்திக் காரணியான மூலதனத்திற்கான உதாரணமாக அமைவது,
(1) ரெக் சிற்றி சிறப்புச் சந்தையின் கட்டடம் ஆகும்.
(2) வரையறுத்த சன் பவர் (தனியார்) கம்பனியின் கட்டடம் ஆகும்.
(3) றோஸ்வில்லா அடுக்குமாடிக் குடியிருப்பு ஆகும்.
(4) விஜயா சோலார் பனல் வணிகத்தின் கட்டடம் ஆகும்.



kalvi.lk

5. "வரையறுத்த சண் பவர் (தனியார்) கம்பனி", "விஜயா சோலார் பனல்" வணிகத்தில் அக்கறை செலுத்துவதற்கான காரணம்
   (1) பங்குலாபத்தைப் பெற்றுக்கொள்வதற்காக
   (2) தொடர்ச்சியாகக் கட்டளைகளைப் பெற்றுக்கொள்வதற்காக
   (3) நியாயமான விலையில் தயாரிப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்காக
   (4) முதலீட்டுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக

6. தற்போது பெரும்பாலான வணிகங்கள் பங்குடைமையிலும் பார்க்க கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளாகச் செயற்பட முன்னுரிமையளிக்கின்றன. இதற்கான காரணமாவது,
   (1) இலாபங்களின் விநியோகம்
   (2) உடைமையாண்மையின் பிரிப்பு
   (3) வரையறுக்கப்படாத நட்டப் பொறுப்பு
   (4) சட்ட ஆளுமை

7. வரையறுக்கப்பட்ட மாவத்தகம பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமானது ஒரு ........①........ துறை ........②........ நிறுவனம் ஆகும்.
   மேலே தரப்பட்ட கூற்றில் முறையே ① ஆம் ② ஆம் இடைவெளிகளுக்குரிய சரியான சொற்களைக் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.
   (1) தனியார், இலாப நோக்குடைய (2) தனியார், இலாப நோக்கற்ற
   (3) பொது, இலாப நோக்குடைய (4) பொது, இலாப நோக்கற்ற

8. காசோலைக் கொடுக்கல்வாங்கலில் அதற்குரிய வணிக வங்கியானது எப்பொழுதும்,
   (1) வரைபவர் ஆகும். (2) வரைவுனர் (drawee) ஆகும்.
   (3) பணம் பெறுபவர் ஆகும். (4) புறக்குறிப்பிடுபவர் ஆகும்.

9. கீழே தரப்படுவது வணிக வங்கி ஒன்றினால் வழங்கப்படும் சில வசதிகள் ஆகும்.
   A - வங்கி மேலதிகப் பற்றை வழங்குதல்
   B - வைப்புகளுக்கு வட்டிகளைச் செலுத்துதல்
   C - நிலையான கட்டளைகளை அமுல்படுத்துதல்
   D - காசோலைகளின் மூலம் கொடுப்பனவுகளைச் செய்தல்
   மேலே தரப்பட்டவற்றுள் நடைமுறைக் கணக்கைப் பேணுபவரால் மட்டும் பெற்றுக்கொள்ளக்கூடிய வசதிகளாவன
   (1) A யும் C யும் ஆகும். (2) A யும் D யும் ஆகும்.
   (3) B யும் D யும் ஆகும். (4) C யும் D யும் ஆகும்.

10. பின்வரும் அட்டவணையில் சில தொடர்பாடல் வழிகள் மற்றும் முறைகள் தரப்பட்டுள்ளன.

| தொடர்பாடல் வழிகள் | தொடர்பாடல் முறைகள் |
|---|---|
| 1 - வாய்மொழி | A - தொலைநகல் (fax) தகவல் |
| 2 - எழுத்து | B - தொலைபேசி |
| 3 - இலத்திரனியல் வாய்மொழி | C - கூட்டம் |
| 4 - இலத்திரனியல் எழுத்து | D - அறிவித்தற் பலகை |

   மேலே தரப்பட்டுள்ள தொடர்பாடல் வழிகளின் ஒழுங்கிற்கமைவாக தொடர்பாடல் முறைகளை சரியாக எடுத்துக் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.
   (1) A, C, B, D (2) B, A, C, D (3) C, D, A, B (4) C, D, B, A

11. ரூ 5 000 000 இற்கு காப்புறுதி செய்யப்பட்ட நுவான் என்பவருக்குச் சொந்தமான மோட்டார் வாகனமானது விபத்துக்குள்ளானது. ஆனால் காப்புறுதிக் கம்பனியானது ரூ 800 000 ஐ மட்டுமே நட்டஈடாக வழங்கியது. இதில் தாக்கத்தை ஏற்படுத்திய காப்புறுதித் தத்துவமானது,
   (1) மிக்குயர் நன்நம்பிக்கை (2) நட்டஈடு
   (3) காப்புறுதி செய்தகு நலன் (4) பதிலாள் வைப்பு



kalvi.lk

12. மைத்திரேயி என்பவர் தனது தோட்டத்தில் சாகுபடி செய்த பழங்களை பழக் கடை ஒன்றை நடாத்தி வரும் குமார் என்பவருக்கு விற்பனை செய்கின்றார். குமாரிடம் வாங்கும் பழங்கள் மிகவும் சுவையானது என ரூபனுடைய மனைவி கூறினாள்.
மேலே தரப்பட்ட சம்பவக் கூற்றின்படி சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) மைத்திரேயியிடமிருந்து குமார் பழங்களைக் கொள்வனவு செய்தல் மொத்த வியாபாரம் ஆகும்.
(2) குமாரிடமிருந்து ரூபன் பழங்களைக் கொள்வனவு செய்தல் மொத்த வியாபாரம் ஆகும்.
(3) குமார், ரூபனுக்கு பழங்களை விற்பனை செய்தல் மொத்த வியாபாரம் ஆகும்.
(4) மைத்திரேயி, குமாருக்கு பழங்களை விற்பனை செய்தல் சில்லறை வியாபாரம் ஆகும்.

13. போக்குவரத்தின் அடிப்படைக் கூறாக தரிப்பிடத்திற்கான உதாரணமாக அமைவது
(1) பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம்
(2) இலங்கை மின்சார சபை
(3) இலங்கையில் வீதி அபிவிருத்தி அதிகார சபை
(4) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

14. முகாமைத்துவத் தொழிற்பாடான திட்டமிடலுக்கான, பாடசாலையின் நடவடிக்கை ஒன்று,
(1) வருட இறுதியில் மாணவர்களுக்கான முன்னேற்ற அறிக்கையை வழங்குதல்
(2) மாணவர்களுக்கான தினவரவு இடாப்பைப் பதிவு செய்தல்
(3) பகுதித் தலைவர்களை நியமித்தல்
(4) வகுப்புக்கான நேரசூசி அட்டவணையைத் தயாரித்தல்

15. முயற்சியாளர் ஒருவர் தனது தயாரிப்புக்காக மீளவும் பயன்படுத்தக்கூடிய பொதி ஒன்றை வடிவமைத்தார். இப்பொதியை உள்ளடக்கியுள்ள சந்தைப்படுத்தல் கலவையின் மாறி யாது?
(1) உற்பத்திப்பொருள்　(2) விலை　(3) இடம்　(4) மேம்படுத்தல்

16. முதலீட்டாளர் ஒருவர் முதலீடு செய்வதன் மூலம் மூலதன ஆதாயங்களை மட்டும் பெற்றுக்கொள்ளக் கூடியது
(1) நகைகள் மற்றும் காணிகள் ஆகும்.
(2) காணிகள் மற்றும் பங்குகள் ஆகும்.
(3) நிலையான வைப்புக்கள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் ஆகும்.
(4) பங்குகள் மற்றும் சேமிப்புக் கணக்குகள் ஆகும்.

17. வரவில் அதிகரிப்பு செலவில் குறைவு என்ற இரட்டைப் பதிவுத் தத்துவம் பொருத்தமானது
(1) சொத்துக்களுக்கு மட்டும் ஆகும்.　(2) செலவுகளுக்கு மட்டும் ஆகும்.
(3) சொத்துக்களுக்கும் செலவுகளுக்கும் ஆகும்.　(4) செலவுகளுக்கும் பொறுப்புகளுக்கும் ஆகும்.

18. வணிகமொன்றின் கணக்கீட்டு சமன்பாட்டில் உரிமையாண்மையின் மாற்றத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய கொடுக்கல்வாங்கல்
(1) ரூ. 5 000 பெறுமதியான பொருட்களை கடனுக்கு கொள்வனவு செய்தல்.
(2) வணிகத்தின் மின்சாரப் பட்டியல் ரூ. 12 000 ஐ செலுத்துதல்.
(3) ரூ. 50 000 பெறுமதியான தளபாடங்களை காசுக்குக் கொள்வனவு செய்தல்.
(4) கடன்பட்டோர் ஒருவரிடமிருந்து ரூ. 14 000 காசோலை பெறுதல்.

19. ராகுல் என்பவர் ரூ. 7 000 கிரயமான பொருட்களை ரூ. 10 000 இற்கு காசுக்கு விற்பனை செய்தார். இக் கொடுக்கல்வாங்கல் மூலம் அவரது வணிகத்தின் மொத்தச் சொத்துக்களின் தொகை
(1) ரூ. 3 000 ஆல் அதிகரிக்கும்.　(2) ரூ. 7 000 ஆல் குறையும்.
(3) ரூ. 10 000 ஆல் அதிகரிக்கும்.　(4) மாற்றம் எதுவும் ஏற்படாது.

20. 31.03.2023 இல் இருந்தவாறு மாதவன் வணிகத்தின் கணக்கீட்டுச் சமன்பாடு பின்வருமாறு

| சொத்துகள் (ரூ.) | = | உரிமையாண்மை (ரூ.) | + | பொறுப்புகள் (ரூ.) |
|---|---|---|---|---|
| 150 000 | | 100 000 | | 50 000 |

கொடுக்கல்வாங்கல் ஒன்றின் பின்னரும் இக் கணக்கீட்டுச் சமன்பாட்டின் பெறுமதியில் மாற்றம் ஏற்படவில்லை எனின், அக் கொடுக்கல்வாங்கல் எது?
(1) கடன்கொடுத்தோர் ஒருவருக்கு ரூ. 7 500 செலுத்தியது.
(2) கடன்பட்டோர் ஒருவரிடமிருந்து ரூ. 10 000 பெற்றுக்கொண்டது.
(3) தரகு வருமானம் ரூ. 15 000 பெற்றுக்கொண்டது.
(4) அலுவலகத்திற்காக ரூ. 100 000 பெறுமதியான தளபாடங்கள் கடனுக்குக் கொள்வனவு செய்யப்பட்டது.


kalvi.lk

21. வணிகமொன்றின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஆகிய இரண்டிலும் குறைவை ஏற்படுத்தும் கொடுக்கல்வாங்கல் எது?
(1) உடைமையாளர் தனது சொந்தத் தேவைக்காக ரூ. 10 000 ஐ வணிகத்தில் இருந்து எடுத்தல்.
(2) வணிகமானது கடன்பட்டோர் ஒருவரிடமிருந்து ரூ. 7 000 பெற்றுக்கொள்ளுதல்.
(3) வணிகமானது ரூ. 8 000 பெறுமதியான சரக்குகளை கடனுக்குக் கொள்வனவு செய்தல்.
(4) வணிகமானது கடன்கொடுத்தோர் ஒருவருக்கு ரூ. 5 000 ஐக் காசாகச் செலுத்துதல்.

22. வணிகமொன்று தனது அலுவலகத்திற்காக 'மொரட்டுவ தளபாடங்கள்' இடமிருந்து ரூ. 250 000 பெறுமதியான தளபாடங்களை காசுக்குக் கொள்வனவு செய்தது. இக்கொடுக்கல்வாங்கலுக்கான சரியான இரட்டைப் பதிவை தெரிவுசெய்க.

| | | | ரூ. |
|---|---|---|---|
| (1) | கொள்வனவுக் கணக்கு | வரவு | 250 000 |
| | காசுக் கணக்கு | செலவு | 250 000 |
| (2) | கொள்வனவுக் கணக்கு | வரவு | 250 000 |
| | 'மொரட்டுவ தளபாடங்கள்' கணக்கு | செலவு | 250 000 |
| (3) | தளபாடங்கள் கணக்கு | வரவு | 250 000 |
| | காசுக் கணக்கு | செலவு | 250 000 |
| (4) | தளபாடங்கள் கணக்கு | வரவு | 250 000 |
| | 'மொரட்டுவ தளபாடங்கள்' கணக்கு | செலவு | 250 000 |

● பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 23, 24 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.
வணிகமொன்றில் நிகழ்ந்த சில கொடுக்கல்வாங்கல்கள் பின்வருமாறு.
A - கடன் கொள்வனவு ரூ. 20 000
B - காசு விற்பனை ரூ. 30 000
C - கடன்கொடுத்தோருக்கு செலுத்தியது ரூ. 25 000
D - அலுவலகத்துக்காக கணினிகள் கடனுக்கு கொள்வனவு செய்தது ரூ. 100 000

23. கொடுப்பனவு கைச்சாத்து மூல ஆவணமாகப் பயன்படுத்தப்படும் கொடுக்கல்வாங்கல்
(1) A ஆகும். (2) B ஆகும். (3) C ஆகும். (4) D ஆகும்.

24. மேலே தரப்பட்ட A, B, C மற்றும் D ஆகிய கொடுக்கல்வாங்கல்களைப் பதிவு செய்வதற்குப் பயன்படுத்தாத மூலப்பதிவேடு எது?
(1) கொள்வனவு நாட்குறிப்பேடு (2) விற்பனை நாட்குறிப்பேடு
(3) காசேடு (4) பொது நாட்குறிப்பேடு

25. இரட்டைப் பதிவுகளானது இரண்டு மூலப்பதிவு ஏடுகளில் பதிவுசெய்யப்படும் கொடுக்கல்வாங்கலைத் தெரிவுசெய்க.
(1) கடன்பட்டோர் ஒருவரிடமிருந்து ரூ. 15 000 காசோலை பெற்றுக்கொள்ளுதல்.
(2) சில்லறைக்காசு வசக்கட்டை மீள்நிரப்பு செய்வதற்கு ரூ. 3 600 பெற்றுக்கொள்ளுதல்.
(3) வணிகத்திற்காக ரூ. 2 500 000 பெறுமதியான மோட்டார் வாகனங்கள் காசுக்குக் கொள்வனவு செய்தல்.
(4) வணிகத்தின் பணத்திலிருந்து உடைமையாளரின் தனிப்பட்ட காப்புறுதிக் கட்டுப்பணம் ரூ. 10 000 செலுத்துதல்.

26. 31.03.2023 இல் இருந்தவாறு ரொசானா வணிகத்தின் சில்லறைக் காசேட்டு மீதி ரூ. 500 ஆகும். மீள்நிரப்புவதற்காக 01.04.2023 இல் ரூ. 4 500 பெற்றுக்கொள்ளப்பட்டது. 30.04.2023 இல் சில்லறைக் காசேட்டு மீதி ரூ. 400 ஆக இருந்தது எனின், சில்லறைக் காசேட்டை மீள்நிரப்புவதற்காக 01.05.2023 இல் பெற்றுக்கொள்ளப்பட்ட தொகை
(1) ரூ. 4 500 (2) ரூ. 4 600 (3) ரூ. 5 000 (4) ரூ. 5 400

27. சுகதி வணிகத்தின் பேரேட்டில் குறித்தவொரு கொடுக்கல்வாங்கலைப் பதிவுசெய்வதற்குரிய இரட்டைப்பதிவு பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| வங்கிக் கணக்கு | வரவு | ரூ. 12 000 |
| விற்பனைக் கணக்கு | செலவு | ரூ. 12 000 |

மேலே தரப்பட்ட இரட்டைப் பதிவுக்குரிய கொடுக்கல்வாங்கலைத் தெரிவுசெய்க.
(1) கடன்பட்டோர் ஒருவரிடமிருந்து பெறப்பட்ட ரூ. 12 000 காசோலை வங்கியில் வைப்பிலிடப்பட்டது.
(2) கப்பன் என்பவருக்கு காசுக்கு விற்பனை செய்ததற்காகப் பெறப்பட்ட காசோலை ரூ. 12 000 மாற்றப்பட்டது.
(3) காசுக்கு விற்பனை செய்ததற்காக பெறப்பட்ட காசோலை ரூ. 12 000 அதே தருணத்தில் வங்கியில் வைப்பிலிடப்பட்டது.
(4) காசுக்கு விற்பனை செய்ததற்காக கடந்தவாரம் பெறப்பட்ட காசோலை ரூ. 12 000 வங்கியில் வைப்பிலிடப்பட்டது.


kalvi.lk

**28.** 31.03.2023 இல் இருந்தவாறு சுதர்சன் வணிகத்தின் வங்கிக் கணக்கு மீதி ரூ. 12 500 ஆக காணப்பட்டது. அதே தினத்தில் வங்கிக்கூற்று மீதி ரூ. 9 000 ஆக இருந்தது. இம்மாற்றத்தில் ஒரு கொடுக்கல்வாங்கல் மட்டுமே தாக்கம் செலுத்தியது. எனின் இக் கொடுக்கல்வாங்கலானது

(1) கடன்பட்டோர் ஒருவரால் வணிகத்தின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக அனுப்பப்பட்ட தொகை ரூ. 3 500 ஆகும்.
(2) வணிகத்தின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக அனுப்பப்பட்ட பங்கிலாப வருமானம் ரூ. 3 500 ஆகும்.
(3) கடன்கொடுத்தோர் ஒருவருக்கு வணிகத்தினால் வழங்கப்பட்ட காசோலை ரூ. 3 500 வங்கியில் இன்னமும் சமர்ப்பிக்கப்படவில்லை.
(4) நிலையான கட்டளையின் மீது வங்கியால் செலுத்தப்பட்ட மின்சாரப் பட்டியல் ரூ. 3 500 ஆகும்.

**29.** வங்கிக்கூற்றைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் வணிகத்தின் வங்கிக் கணக்கு மீதியை சீராக்கும்போது வங்கிக் கணக்கிற்கு வரவு வைக்கப்படும் கொடுக்கல்வாங்கலைத் தெரிவுசெய்க.

(1) நிலையான கட்டளையின் மீது வங்கியால் செலுத்தப்பட்ட மின்சாரக் கட்டணங்கள் ரூ. 2 500 ஆகும்.
(2) வங்கியால் அறவிடப்பட்ட காசோலைப் புத்தகக் கட்டணம் ரூ. 1 500 ஆகும்.
(3) கடன்பட்டோர் ஒருவரால் வங்கியில் நேரடியாக வைப்புச் செய்யப்பட்ட தொகை ரூ. 5 000 ஆகும்.
(4) வங்கியால் அறவிடப்பட்ட சேவைக் கட்டணம் ரூ. 2 000 ஆகும்.

**30.** இலாபநோக்கற்ற நிறுவனங்களினது குறித்தவொரு காலப்பகுதியில் மேற்கொண்ட பொருளாதார நடவடிக்கைகளின் பெறுபேற்றைக் கணிப்பதற்காக தயாரிப்பது.

(1) வருமானச்செலவுக் கணக்கு
(2) பெறுவனவு கொடுப்பனவுக் கணக்கு
(3) நிதி நிலைமைக் கூற்று
(4) வியாபார இலாபநட்டக் கணக்கு

**31.** விளையாட்டுக் கழகம் ஒன்றின் பெறுவனவு கொடுப்பனவுக் கணக்கில் பதியப்படுவதும் ஆனால் வருமானச் செலவுக் கணக்கில் உள்ளடக்கப்படாததுமான கொடுக்கல்வாங்கல் எது?

(1) விளையாட்டு உபகரணங்களை ரூ. 2 500 இற்கு கொள்வனவு செய்தல்
(2) அங்கத்துவக் கட்டணமாக ரூ. 5 000 பெற்றுக் கொள்ளுதல்
(3) பழைய பத்திரிகைகளை ரூ. 2 000 இற்கு விற்பனை செய்தல்
(4) விளையாட்டு உபகரணங்களின் பெறுமானத்தேய்வு ரூ. 1 000 ஆகும்.

● பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 32 தொடக்கம் 34 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

பின்வருவன மர அலுமாரிகளைத் தயாரிக்கும் வணிகம் ஒன்றின் 31.01.2023 இல் முடிவடைந்த மாதத்திற்குரிய செலவுகள் ஆகும்.

| | | ரூ. |
|---|---|---|
| A | மரங்கள் கொள்வனவு | 280 000 |
| B | மர வேலை செய்பவர் சம்பளம் | 200 000 |
| C | மணற் கடதாசிகள், பிணைக்கிகள் மற்றும் ஆணிகள் போன்றன | 15 000 |
| D | மின்சாரக் கட்டணம் | 12 000 |
| E | வடிவமைப்புச் செலவுகள் | 17 000 |
| F | இயந்திர திருத்தச் செலவுகள் | 5 000 |

**32.** மர அலுமாரி தயாரிப்புக்கான மூலக்கிரயத்தைக் கணிப்பிடுவதற்குப் பொருத்தமான உருப்படிகளை மட்டும் உள்ளடக்கியுள்ள விடையைத் தெரிவுசெய்க.

(1) A மற்றும் B ஆகும்.
(2) A, B மற்றும் C ஆகும்.
(3) A, B மற்றும் E ஆகும்.
(4) A, B, C மற்றும் E ஆகும்.

**33.** 31.01.2023 இல் முடிவடைந்த மாதத்திற்கு, மர அலுமாரி தயாரிப்பதற்கு பொருத்தமான மேந்தலைக் கிரயங்கள்

(1) ரூ. 17 000 (2) ரூ. 32 000 (3) ரூ. 44 000 (4) ரூ. 49 000

**34.** மர அலுமாரி தயாரிப்புடன் தொடர்புடைய பொருத்தமான மறைமுக மூலப் பொருட்கள் செலவு ஒன்று,

(1) A ஆகும். (2) B ஆகும். (3) C ஆகும். (4) D ஆகும்.


kalvi.lk

- பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 35 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

01.01.2022 இல் ஆரம்பிக்கப்பட்ட ஆதியா வணிகத்தினால் 31.12.2022 இல் இருந்தவாறு தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதியில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட சில தகவல்கள் வருமாறு.

| | ரூ. |
|---|---|
| மூலதனம் | 200 000 |
| காசு மீதி | 28 000 |
| விற்பனைகள் | 300 000 |
| கடன்பட்டோர் | 35 000 |
| கடன் கொடுத்தோர் | 45 000 |
| கொள்வனவுகள் | 190 000 |
| தளபாடங்களும் உபகரணங்களும் | 120 000 |
| வங்கிக்கடன் 10% | 100 000 |

மேலதிக தகவல்கள்,

1. கட்டட வாடகை மாதாந்தம் ரூ. 2 500 ஆகக் காணப்பட்டதுடன் நடைமுறையாண்டில் கட்டட வாடகையாக ரூ. 24 000 காசாகச் செலுத்தப்பட்டுள்ளது.
2. தளபாடங்களும் உபகரணங்களும் நேர்கோட்டு முறையில் வருடாந்தம் 5% பெறுமானத்தேய்வு செய்யப்படல் வேண்டும்.
3. 31.12.2022 இல் இருந்தவாறு கடன்பட்டோரில் இருந்து ரூ. 5 000 அறவிடமுடியாக் கடனாகப் பதிவழிக்கப்படல் வேண்டும்.
4. வங்கிக் கடனானது 01.07.2022 இல் பெற்றுக்கொள்ளப்பட்டதாகும். 31.12.2022 வரை வங்கிக் கடனுக்கான வட்டி செலுத்தப்படவில்லை.
5. 31.12.2022 இல் இருந்தவாறு சரக்கிருப்புகள் ரூ. 44 000 ஆகும்

35. ஆதியா வணிகத்தின் மொத்த இலாபத்தை சரியாகக் கணிப்பிடுவதை எடுத்துக் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.
(1) ரூ. 300 000 - ரூ. 190 000 (2) ரூ. 190 000 - ரூ. 44 000
(3) ரூ. 300 000 - ( ரூ. 190 000 + ரூ. 44 000) (4) ரூ. 300 000 - ( ரூ. 190 000 - ரூ. 44 000)

36. 31.12.2022 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆதியா வணிகத்தின் கட்டட வாடகையின் தொகை எவ்வளவு?
(1) ரூ. 2 500 (2) ரூ. 6 000 (3) ரூ. 24 000 (4) ரூ. 30 000

37. 31.12.2022 இல் இருந்தவாறு ஆதியா வணிகத்தின் நிதி நிலைமைக் கூற்றில் காணப்படும் ஒரு நடைமுறைப் பொறுப்பு
(1) செலுத்தப்பட வேண்டிய கட்டட வாடகை ரூ. 6 000
(2) செலுத்தப்பட வேண்டிய வங்கிக்கடன் வட்டி ரூ. 10 000
(3) செலுத்திய கட்டட வாடகை ரூ. 24 000
(4) வங்கிக் கடன் ரூ. 100 000

38. ஆதியா வணிகத்தின் 31.12.2022 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்றை தயாரிக்கையில் நிர்வாகச் செலவுகளில் மட்டும் உள்ளடங்கியுள்ளதாக எடுத்துக் காட்டப்படும் விடையைத் தெரிவுசெய்க.
(1) தளபாட பெறுமானத்தேய்வு, கடன் வட்டி
(2) அறவிடமுடியாக் கடன், கட்டட வாடகை
(3) கட்டட வாடகை, தளபாட பெறுமானத்தேய்வு
(4) அறவிடமுடியாக் கடன், கடன் வட்டி

39. 31.12.2022 இல் முடிவடைந்த ஆண்டுக்கான ஆதியா வணிகத்தின் இலாப நட்டக் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டிய வங்கிக் கடன் வட்டி
(1) ரூ. 5 000 (2) ரூ. 10 000 (3) ரூ. 100 000 (4) ரூ. 105 000

40. 31.12.2022 இல் இருந்தவாறு ஆதியா வணிகத்தின் நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்படும் கடன்பட்டோர் தொகை
(1) ரூ. 5 000 (2) ரூ. 30 000 (3) ரூ. 35 000 (4) ரூ. 40 000

* *


kalvi.lk

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

රහස්‍යයි
அந்தரங்கமானது

# අ.පො.ස. (සා.පෙළ) විභාගය - 2022 (2023)
# க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை - 2022 (2023)

විෂය අංකය / பாட இலக்கம்: **60**

විෂයය / பாடம்: **வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்**

## I පත්‍රය - පිළිතුරු
## I பத்திரம் - விடைகள்

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 4 | 11. | 2 | 21. | 4 | 31. | 1 |
| 02. | 2 | 12. | 1 | 22. | 3 | 32. | 3 |
| 03. | 3 | 13. | 1 | 23. | 3 | 33. | 2 |
| 04. | 4 | 14. | 4 | 24. | 2 | 34. | 3 |
| 05. | 2 | 15. | 1 | 25. | 2 | 35. | 4 |
| 06. | 4 | 16. | 1 | 26. | 2 | 36. | 4 |
| 07. | 2 | 17. | 3 | 27. | 3 | 37. | 1 |
| 08. | 2 | 18. | 2 | 28. | 4 | 38. | 3 |
| 09. | 2 | 19. | 1 | 29. | 3 | 39. | 1 |
| 10. | 4 | 20. | 2 | 30. | 1 | 40. | 2 |

විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் } එක් පිළිතුරකට ලකුණු / ஒரு சரியான விடைக்கு **01** බැගින் / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் **01 × 40 = 40**

පහත නිදසුනෙහි දැක්වෙන පරිදි බහුවරණ උත්තරපත්‍රයේ අවසාන තීරුවේ ලකුණු ඇතුළත් කරන්න.
கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் உதாரணத்திற்கு அமைய பல்தேர்வு வினாக்களுக்குரிய புள்ளிகளை பல்தேர்வு வினாப்பத்திரத்தின் இறுதியில் பதிக.

නිවැරදි පිළිතුරු සංඛ්‍යාව / சரியான விடைகளின் தொகை: 25/40

I පත්‍රයේ මුළු ලකුණු / பத்திரம் I இன் மொத்தப்புள்ளி: 25/40



kalvi.lk

# வணிகக் கல்வியும் கணக்கீடும் II

**1.** பின்வரும் சம்பவக் கற்கையைப் பயன்படுத்தி (i) தொடக்கம் (x) வரையான வினாக்களுக்கு விடை தருக.

பொலநறுவையில் வசிக்கும் ஆதிரன் என்பவர் 01.01.2023 இல் ரூ. 800 000 முதலீட்டுடன் வாடகைக்கு எடுத்த கட்டடமொன்றில் "எமது நெல்" எனும் பெயரில் அரிசி விற்பனை செய்யும் வணிகம் ஒன்றை தொடங்கினார். அதே நாளில், 12% வருடாந்த வட்டியில் ரூ. 500 000 கடனை கிராமிய வங்கியில் பெற்றுக் கொண்டதன் மூலம் ரூ. 900 000 இற்கு அரிசி ஆலை ஒன்றையும் ரூ. 100 000 இற்கு ஏனைய உபகரணங்களையும் கொள்வனவு செய்தார்.

வணிக நிர்வாகமாணி பட்டப்படிப்பை பூர்த்தி செய்து வந்ததன் பின்னர் ஆதிரனின் மகனான கோசலன் வணிகத்தின் செயற்பாடுகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். அவித்த ஈர நெல்லை வெயிலில் காய வைப்பதற்கும் அரைப்பதற்கும் சுபயான் என்பவர் பணிக்கு அமர்த்தப்பட்டார்.

31.01.2023 இல் முடிவடைந்த மாதத்திற்காக நிகழ்ந்த கொடுக்கல்வாங்கல்கள் வருமாறு.

| | ரூ. |
|---|---|
| காசுக்குக் கொள்வனவு செய்த நெல்.......................... | 150 000 |
| காசுக்கு விற்பனை செய்த அரிசி.......................... | 431 500 |
| மின்சாரக் கட்டணம் செலுத்தியது.......................... | 15 000 |
| ஊழியர் சம்பளம் செலுத்தியது.......................... | 60 000 |
| விநியோக லொறிக் கட்டணம் செலுத்தியது.......................... | 40 000 |
| முகாமையாளர் சம்பளம் செலுத்தியது.......................... | 50 000 |
| உமி விற்பனை.......................... | 50 000 |

மேலதிக தகவல்கள் :

- அரிசி ஆலைக்கு நேர்கோட்டு முறையில் வருடாந்தம் 12% பெறுமானத்தேய்வு செய்யப்படல் வேண்டும்.
- 31.01.2023 இல் இருந்தவாறு நெல் மற்றும் அரிசி என்பன கையிருப்பாகக் காணப்படவில்லை.
- 31.01.2023 இல் வங்கிக் கடன் மீதான வட்டி செலுத்தப்படவில்லை.
- 31.01.2023 வரை மாதாந்த கட்டட வாடகை ரூ. 10 000 செலுத்தப்படவில்லை.

கடந்த பருவ காலத்தின் கடுமையான வரட்சியின் விளைவாக நெல் உற்பத்தி குறைவடைந்ததன் காரணமாக அரிசி உற்பத்தியாளரிடையே கடுமையான போட்டி காணப்பட்டது. அரசாங்கமும் நெல் கொள்வனவின் மீது கட்டுப்பாட்டு விலையைச் செயற்படுத்தியது. இதனால் "எமது நெல்" வணிகமானது ஒரு கிலோ அரிசியின் விலையை ஒரு ரூபாவினால் குறைக்கத் தீர்மானித்தது.

(i) (அ) "எமது நெல்" வணிகத்தின் மூலம் பூர்த்தி செய்யப்படும் மனித விருப்பம் யாது?
(ஆ) "எமது நெல்" வணிகத்தின் இரண்டு அக்கறையுடைய தரப்பினரை உதாரணங்களுடன் எழுதுக.

(ii) சம்பவக் கற்கையில் இருந்து பிரித்தெடுப்பதன் மூலம் நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சியாண்மை ஆகிய ஒவ்வொரு உற்பத்திக் காரணிக்கும் உதாரணங்கள் எழுதுக.

(iii) (அ) "எமது நெல்" வணிகத்தின் பலம் மற்றும் அச்சுறுத்தல் ஆகியவற்றை எழுதுக.
(ஆ) சம்பவக் கற்கையில் உள்ளடங்கியுள்ள "எமது நெல்" வணிகத்தின் பொருளாதார சூழல் காரணிக்கான உதாரணத்தை எழுதுக.

(iv) "எமது நெல்" வணிகத்தின் பின்வரும் ஒவ்வொன்றுக்கும் உதாரணம் எழுதுக.
(அ) சந்தைப்படுத்தல் கலவையின் உற்பத்திப்பொருள்
(ஆ) முகாமைத்துவக் கருமமாகத் திட்டமிடல்

(v) வங்கிக் கடனைப் பெற்றுக் கொண்டமைக்குரிய இரட்டைப் பதிவை தொகைகளுடன் எழுதுக.

(vi) (அ) "எமது நெல்" வணிகத்தினால் பயன்படுத்தப்படும் மூல ஆவணங்கள் இரண்டை எழுதுக.
(ஆ) "எமது நெல்" வணிகத்தின் உற்பத்திக் கிரயத்தில் உள்ளடங்கியுள்ள நேர்க்கிரயம் மற்றும் மறைமுகக் கிரயம் ஆகியவற்றை தொகைகளுடன் எழுதுக.

(vii) 31.01.2023 இல் இருந்தவாறு "எமது நெல்" வணிகத்தின் கையிலுள்ள காசைக் கணிப்பிடுக.

(viii) 31.01.2023 இல் முடிவடைந்த மாதத்திற்கான "எமது நெல்" வணிகத்தின் தேறிய இலாபம் அல்லது நட்டத்தைக் கணிப்பிடுக.

(ix) 31.01.2023 இல் இருந்தவாறு "எமது நெல்" வணிகத்தின் இரண்டு நடைமுறைப் பொறுப்புக்களை தொகைகளுடன் எழுதுக.

(x) 31.01.2023 இல் இருந்தவாறு "எமது நெல்" வணிகத்தின் மொத்தச் சொத்துக்கள் மற்றும் உரிமையாண்மையைக் கணிப்பிடுக. **(02 x 10 = 20 புள்ளிகள்)**



kalvi.lk

1. i. (அ) அரிசி (1 × 1 = 01 புள்ளி)

(ஆ)
- உரிமையாளர் - ஆதிரன்
- நிதி நிறுவனம் - கிராமிய வங்கி
- முகாமையாளர் - கோசலன் / ஆதிரனின் மகன்
- ஊழியர் - சுபயான்
- வழங்குனர் - நெல் விநியோகத்தர்
- வாடிக்கையாளர் - அரிசி கொள்வனவாளர், உமி கொள்வாளர்
- அரசு - அரசு
- போட்டியாளர் - நெல் உற்பத்தியாளர்

(1/2 × 2 = 01 புள்ளிகள்)

ii.
- நிலம் - சூரிய ஒளி / காற்று / வெயில்
- உழைப்பு - சுபயான் / கோசலன் /ஆதிரனின் மகன்
- மூலதனம் - காசு / அரிசி ஆலை / ஏனைய உபகரணம் / நெல் / அரிசி / உமி
- முயற்சியாண்மை - ஆதிரனின் முயற்சியாண்மை திறன்

(1/2 × 4 = 02 புள்ளிகள்)

iii. (அ) பலம்
- ஆதிரனின் நிதிப்பலம்
- வணிக நிர்வாகமாணி பட்டம்பெற்ற முகாமையாளர் / கோசலன்

(1/2 × 1 = 1/2 புள்ளிகள்)

அச்சுறுத்தல்
- வரட்சியான காலநிலை
- அரிசி உற்பத்தியாளர்களிடையே கடுமையான போட்டி காணப்பட்டமை.
- நெல் கொள்வனவின் மீது அரசு கட்டுப்பாட்டு விலையை செயற்படுத்தியமை

(1/2 × 1 = 1/2 புள்ளிகள்)

(ஆ)
- வங்கிக்கடன் வட்டி 12%
- கட்டுப்பாட்டு விலையைச் செயற்படுத்தியமை
- ஒரு கிலோ அரிசியின் விலையை ஒரு ரூபாவால் குறைக்கத் தீர்மானித்தமை

(1 × 1 = 01 புள்ளி)

iv. (அ)
- நெல்
- அரிசி
- உமி

(1 × 1 = 01 புள்ளி)

(ஆ) ஒரு கிலோ அரிசியின் விலையை ஒரு ரூபாவால் குறைக்கத் தீர்மானித்தல்

(1 × 1 = 01 புள்ளி)

V.
| | | |
|---|---|---|
| காசுக் கணக்கு வரவு | ரூபா | 500 000 |
| வங்கிக் கடன் கணக்கு செலவு | ரூபா | 500 000 |

(கிராமிய வங்கிக் கணக்கு)

(02 புள்ளிகள்)



kalvi.lk

vi. (அ) • பற்றுச்சீட்டு
- கொடுப்பனவுக் கைச்சாத்து
- பொது நாட்குறிப்பு கைச்சாத்து

(1/2 × 2 = 01 புள்ளி)

(ஆ) நேர்கிரயம் ரூபா
- நெல் கொள்வனவு 150 000
- ஊழியர் சம்பளம் (சுபாயன்) 60 000

(1/2 × 1 = 1/2 புள்ளிகள்)

மறைமுகக் கிரயம் / நேரில் கிரயம் ரூபா
- மின்சாரம் 15 000
- அரிசி ஆலை பெறுமான தேய்வு 9 000
- முகாமையாளர் சம்பளம் 50 000
- கட்டட வாடகை 10 000

(1/2 × 1 = 1/2 புள்ளி)

vii. 31.01.2023 இல் காசு மீதி 466500 ரூபா (02 புள்ளிகள்)

அல்லது

காசுக் கணக்கு

| திகதி | ப.சீ.இ | விபரம் | பே.ப | பெறுமதி | திகதி | கை.இ | விபரம் | பே.ப | பெறுமதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01/01/23 | | மூலதனம் | | 800 000 | 01/01/23 | | அரிசி ஆலை | | 900 000 |
| 01/01/23 | | வங்கிக்கடன் | | 500 000 | 01/01/23 | | ஏனைய உபகரணங்கள் | | 100 000 |
| | | அரிசி விற்பனை | | 431 500 | | | நெல்கொள்வனவு | | 150 000 |
| | | உமி விற்பனை | | 50 000 | | | மின்சாரம் | | 15 000 |
| | | | | | | | சம்பளம் | | 60 000 |
| | | | | | | | விநியோகலொறி கட்டணம் | | 40 000 |
| | | | | | | | முகாமையாளர் சம்பளம் | | 50 000 |
| | | | | | 31/01/23 | | மீதி.கீ.கொ.செ | | 466 500 |
| | | | | 1781 500 | | | | | 1781 500 |
| 01/02/23 | | மீதி.கீ.கொ.வ | | 466 500 | | | | | |

(ஏதாவது 03 விடயங்களுக்கு 1/2 புள்ளி வீதம் 1 1/2 புள்ளிகள்)



kalvi.lk

viii. 31-21-2023 இல் தேறியலாபம் 142 500 (02 புள்ளிகள்)

அல்லது

எமது நெல் வணிகத்தின்
31.01.2023 இல் முடிவடைந்த மாதத்திற்கான வருமானக்கூற்று

| | ரூபா | ரூபா |
|---|---|---|
| **வருமானம்** | | |
| அரிசி விற்பனை | 431 500 | |
| உமி விற்பனை | 50 000 (1/2) | 481500 |
| **செலவுகள்** | | |
| நெல்கொள்வனவு | 150 000 | |
| மின்சாரம் | 15 000 | |
| ஊழியர் சம்பளம் | 60 000 | |
| விநியோக லொறி கட்டணம் | 40 000 (1/2) | |
| முகாமையாளர் சம்பளம் | 50 000 | |
| அரிசி ஆலை தேய்வு | 9 000 | |
| வங்கி கடன் வட்டி | 5 000 | |
| கட்டட வாடகை | 10 000 (1/2) | 339 000 |
| தேறிய இலாபம் | | 142 500 |

(சரியான வருமானங்கள் 02 விடயங்களுக்கு 1/2 புள்ளியும் சரியான 04 செலவு விடயங்களுக்கு 1/2 புள்ளி வீதம் மொத்தம் 1 1/2 புள்ளிகள்)

ix. 31.01.2023 இல் நடைமுறைப் பொறுப்பு

- அட்டுறு வங்கிக் கடன் வட்டி 5000 ரூபா
- கட்டட வாடகை நிலுவை 10000 ரூபா

(1 × 2 = 2 புள்ளி)



kalvi.lk

**x** 31.01.2023 இல் மொாத்த சொத்துக்கள் 1457500 ரூபா (01 புள்ளி)

| | | |
|---|---|---|
| அரிசி ஆலை | 900000 - 9000 | 891 000 (1/2) |
| ஏனைய உபகரணங்கள் | | 100 000 |
| காசு | | (1/2) 466 500 |
| மொத்தச் சொத்துக்கள் | | 1457 500 |

31.03.2023 இல் உரிமையாண்மை 942500 ரூபா (1 புள்ளி)

அல்லது

| | | |
|---|---|---|
| மூலதனம் | 800 000 | (1) |
| தேறிய இலாபம் | * 142 500 | |
| உரிமையாண்மை | 942500 | |

அல்லது

உரிமையாண்மை = மொத்த சொத்து - மொத்தப் பொறுப்பு

(1/2) = 1457500 - 515000 (1/2)

= 942 500 ரூபா

அல்லது

உரிமையாண்மை

= மூலதனம் + (வருமானம் - செலவு)

= 800000 + (481500 - 339000) (1)

= 942 500 ரூபா

| | (i) | | (ii) | (iii) | | (iv) | | (v) | (vi) | | (vii) | (viii) | (ix) | (x) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Q 1 | (அ) | (ஆ) | | (அ) | (ஆ) | (அ) | (ஆ) | | (அ) | (ஆ) | | | | | 20 |
| | 01 | 01 | 02 | 01 | 01 | 01 | 01 | 02 | 01 | 01 | 02 | 02 | 02 | 02 | 20 |



Education கல்வி அடியாபன
kalvi.lk

**பகுதி I - வணிகக் கல்வி**

(இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.)

2. (i) தனியுடைமை ஒன்றின் வணிகப் பெயரைப் பதிவு செய்வதன் மூலம் கிடைக்கும் நன்மைகள் இரண்டு எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) பின்வரும் கூற்றுக்கள் உண்மையா, பொய்யா என்பதைக் குறிப்பிடுக.

(அ) வணிகமானது எப்பொழுதும் மக்களின் தேவை மற்றும் விருப்பத்தைப் பூர்த்தி செய்கிறது.

(ஆ) வணிகமானது எப்பொழுதும் இலாபம் உழைப்பதை நோக்கமாகக் கொண்டு ஸ்தாபிக்கப்படுகின்றது.

(இ) வணிகமொன்றின் அக்கறையுடைய தரப்பினர் எப்பொழுதும் வணிகத்தின் அகச்சூழலாக காணப்படுவர்.

(ஈ) வரையறுத்த பொதுக் கம்பனி ஒன்றில், அதன் முதலீட்டாளருடைய நட்டப் பொறுப்பானது அவர்களது முதலீட்டின் தொகைக்கு வரையறுக்கப்பட்டதாக இருக்கும். (02 புள்ளிகள்)

(iii) வரையறுத்த 'லக் தேயிலை' (தனியார்) கம்பனியானது, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை மற்றும் கிராம அபிவிருத்தித் திணைக்களம் ஆகியவற்றின் ஒப்புதலுடன் ஊவா மாகாணத்தில் உள்ள மக்களுக்காக 50 குழாய்க் கிணறுகளை நிர்மாணிக்கும் செயற்றிட்டம் ஒன்றை ஆரம்பித்தது.

(அ) இச் செயற்றிட்டத்தின் மூலம் பூர்த்தி செய்யப்படும் மனிதத் தேவை மற்றும் விருப்பத்தை எழுதுக.

(ஆ) இச்சம்பவக் கற்கையில் காணப்படும் இரண்டு வணிக நிறுவனங்களை குறிப்பிடுவதுடன் அவற்றை உடைமையின் பிரகாரம் வகைப்படுத்துக. (02 புள்ளிகள்)

(iv) இரண்டு வணிகங்களால் எடுக்கப்பட்ட இரண்டு நடவடிக்கைகள் கீழே தரப்படுகின்றது.

A - இலங்கை மத்திய வங்கியின் பரிந்துரையின் பிரகாரம் பாஸ்ட் காஷ் (Fast Cash) நிதிக் கம்பனியானது வைப்புக்கள் மீதான வருடாந்த வட்டி வீதத்தை 15% இல் இருந்து 20% ஆக அதிகரித்தது.

B - "நிறைந்த சுவை" என்ற மரமுந்திரிகைப் பருப்பு உற்பத்தியாளர்கள் தமது நிகழ்நிலை வாடிக்கையாளர்களுக்காக "முடிவு மென்பொருள் (End software)" (தனியார்) கம்பனியிடமிருந்து புதிய கணினிச் செயலி (app) ஒன்றை பெற்றுக் கொண்டனர்.

(அ) மேலே A மற்றும் B நடவடிக்கைகளுடன் தொடர்புடைய சூழல் காரணிகளை எழுதுக.

(ஆ) A மற்றும் B யில் உள்ளடங்கியுள்ள பின்வருவனவற்றைக் குறிப்பிடுக.

1. சேவை வழங்கும் வணிகம்
2. பொருள் உற்பத்தி வணிகம்

(02 புள்ளிகள்)

(மொத்தம் 08 புள்ளிகள்)

2. i.
- வணிகத்துக்கான அடையாளமொன்று கிடைத்தல்
- வணிகத்தின் பெயரின் உரிமையினை உறுதிப்படுத்தக் கூடியதாக இருத்தல்
- அரசினால் வழங்கப்படும் ஊக்குவிப்புக்களை பெற்றுக்கொள்வதற்கான தகைமை கிடைத்தல்
- கடனை இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடிதல்

(01 x 2 = 02 புள்ளிகள்)

ii. அ. உண்மை

ஆ. பொய்

இ. பொய்

ஈ. உண்மை

(1/2 x 4 = 02 புள்ளிகள்)



kalvi.lk

iii. அ.

| நிகழ்வு | மனித தேவை | விருப்பம் |
|---|---|---|
| 1 | உணவு | குழாய் கிணறு / நீர் |

(ஒரு மனித தேவைக்கு 1/2 புள்ளி ஒரு விருப்பத்திற்கும் 1/2 புள்ளி மொத்தம் 1 புள்ளி) (01 புள்ளி)

ஆ. வரையறுத்த லக் தேயிலை (தனியார்) கம்பனி - தனியார் துறை
தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை - அரச (பொதுத் ) துறை
கிராம அபிவிருத்தித் திணைக்களம் - அரச (பொதுத்) துறை

( ஒரு வணிக நிறுவனத்திற்கும் வகைப்படுத்தலுக்கும் 1/2 புள்ளி வீதம் இரண்டு வணிக நிறுவனத்திற்கும் வகைப்படுத்தலுக்கும் மொத்தம் 1 புள்ளி) (01 புள்ளி)

iv. அ. A – பொருளாதார சூழல்
B. – தொழில்நுட்ப சூழல் / பூகோளமயச் சூழல்

(1/2 × 2 = 1 புள்ளி)

ஆ. 1. – இலங்கை மத்திய வங்கி / பாஸ்ட் காஷ் (Fast Cash) நிதிக் கம்பனி / முடிவு மென் பொருள் (End software) தனியார் கம்பனி (1/2 × 1 = 1/2 புள்ளி)

2. நிறைந்த சுவை என்ற மரமுந்திரிகைப் பருப்பு உற்பத்தியாளர்கள்

(1/2 × 1 = 1/2 புள்ளி)

| | (i) | (ii) | | | | (iii) | | (iv) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | அ | ஆ | இ | ஈ | அ | ஆ | அ | ஆ | |
| Q2 | 02 | 1/2 | 1/2 | 1/2 | 1/2 | 01 | 01 | 01 | 01 | 8/8 |


kalvi.lk

3. (i) போக்குவரத்தின் அடிப்படை மூலக்கூறுகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) பின்வரும் கூற்றுகள் உண்மையா, பொய்யா என்பதனைக் குறிப்பிடுக.


(அ) இறுதி நுகர்விற்காக பொருள் அல்லது சேவையை விற்பனை செய்தல் சில்லறை வணிகம் எனப்படும்.

(ஆ) தொடர்பாடல் செயன்முறையில், செய்தியைப் பெறுபவர் அச்செய்தி தொடர்பாக செயற்படும் முறை பின்னூட்டல் எனப்படும்.

(இ) கடன் அட்டை ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கு நபர் ஒருவர் வங்கிக் கணக்கை வைத்திருக்க வேண்டும்.

(ஈ) உயிருக்கு அல்லது ஆதனத்துக்கு காப்புறுதியைப் பெற்றுக்கொள்வதற்கு நபரொருவருக்குச் சட்ட ரீதியாக காணப்படும் உரிமை காப்புறுதி செய்தகு நலன் என அழைக்கப்படும். (02 புள்ளிகள்)

(iii) (A) தொடக்கம் (F) வரையான எழுத்துக்களுடன் காசோலை வடிவம் ஒன்று கீழே தரப்பட்டுள்ளது.




மேலே தரப்பட்ட காசோலையைப் பயன்படுத்தி பின்வரும் அட்டவணையில் உள்ளடங்கியுள்ள காசோலை மூலக்கூறுகளுக்குப் பொருத்தமான சரியான எழுத்துக்களை எழுதுக. (முதலாவது மூலக்கூறுக்குப் பொருத்தமான எழுத்து காட்டப்பட்டுள்ளது.)

| காசோலை மூலக்கூறு | எழுத்து |
|---|---|
| 1. காசோலை எழுதப்பட்ட திகதி | C |
| 2. வரைபவரது கையொப்பம் | |
| 3. வரைவுனி (Drawee) | |
| 4. பணம் பெறுபவர் பெயர் | |
| 5. இலக்கத்தில் தொகை | |

(02 புள்ளிகள்)

(iv) யமுனா என்பவர் "வணிக இலக்கு" தொடர்பான செயலமர்வில் இருந்து திரும்பும்போது தனது மோட்டார் காப்புறுதிக் கொடுப்பனவை இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தியிருந்தார். மேலும் தனது கைத்தொலைபேசியின் மூலம் நெற் கொம் (Netcom) தனியார் கம்பனிக்கு தனது வணிகத்தின் வலைத்தளப் பக்கத்தின் வடிவமைப்புத் தொடர்பில் அழைப்பை எடுத்து விசாரணை செய்தார்.

(அ) மேலே தரப்பட்ட சம்பவக் கற்கையில் காப்புறுதி தொடர்பில் உள்ளடக்கப்பட்டுள்ள முதலாம் தரப்பினர், இரண்டாம் தரப்பினர் ஆகியோரை சரியான ஒழுங்கு வரிசையில் குறிப்பிடுக.

(ஆ) மேலே தரப்பட்ட சம்பவக் கற்கையில் உள்ளடங்கியுள்ள தொடர்பாடல் முறையையும் அதற்குப் பொருத்தமான தொடர்பாடல் ஊடகத்தையும் சரியான ஒழுங்கு முறையில் எழுதுக.

(02 புள்ளிகள்)

(மொத்தம் 08 புள்ளிகள்)

**3.** (i)
- வழி / மார்க்கம்
- ஊடகம்
- சக்தி / வலு
- தரிப்பிடம்

(1/2 × 4 = 2புள்ளிகள்)



kalvi.lk

ii. அ. உண்மை

ஆ. பொய்

இ. பொய்

ஈ. உண்மை

(1/2 × 4 = 2 புள்ளிகள்)

iii.

| காசோலை மூலக்கூறு | எழுத்து |
|---|---|
| 2. வரைபவரது கையொப்பம் | F |
| 3. வரையுணி (Drawee) | A |
| 4. பணம் பெறுபவர் பெயர் | B |
| 5. இலக்கத்தில் தொகை | E |

(1/2 × 4 = 2 புள்ளிகள்)

iv. அ. முதலாம் கட்சியினர் –யமுனா

இரண்டாம் கட்சியினர் – இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம்

(1/2 × 2 = 1 புள்ளி)

ஆ.

| தொடர்பாடல் முறை | | தொடர்பாடல் ஊடகம் |
|---|---|---|
| வாய்மொழி மூலம் | – | செயலமர்வு |
| இலத்திரனியல் வாய்மொழி மூலம் | – | கையடக்கத் தொலைப்பேசி |

(1/2 × 2 = 1 புள்ளி)

மொத்தம் 08 புள்ளிகள்

| Q3 | (i) | (ii) | | | | (iii) | (iv) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | அ | ஆ | இ | ஈ | | அ | ஆ | |
| | 02 | 1/2 | 1/2 | 1/2 | 1/2 | 02 | 01 | 01 | 8/8 |



Education கல்வி அධ්‍යාපන
kalvi.lk

**4.** (i) முகாமைத்துவக் கருமங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) பின்வரும் கூற்றுகள் உண்மையா, பொய்யா என்பதனைக் குறிப்பிடுக.

(அ) ஆதனங்களில் முதலீடு செய்வதன் மூலம் மூலதன ஆதாயங்களை மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும்.

(ஆ) முதலீட்டில் இடருக்கும் திரும்பலுக்கும் இடையே எதிர்மறைத் தொடர்பு காணப்படுகின்றது.

(இ) சந்தைப்படுத்தற் கலவையில், விலை என்ற மாறி மட்டுமே வணிகத்திற்கான வருமானத்தை உருவாக்குகின்றது.

(ஈ) வரையறையான வளங்களில் இருந்து உச்சமாக நலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு வணிகத்திற்கு முகாமைத்துவம் தேவைப்படுகிறது. (02 புள்ளிகள்)

(iii) ஆபரண உற்பத்தி வணிகமொன்று நிகழ்நிலை ஊடாக புதிய வடிவமைப்புகளைப் பெற்றுக்கொள்ளத் தீர்மானித்ததுடன் விற்பனைகளை முன்னேற்றும் நோக்கத்துடன் விளம்பரப்படுத்தல் செலவுகளையும் அதிகரித்தது.

(அ) மேலே தரப்பட்ட சம்பவக் கற்கையில் உள்ளடங்கியுள்ள சந்தைப்படுத்தற் கலவை மாறிகள் இரண்டை எழுதுக.

(ஆ) சம்பவக் கற்கையில் இருந்து பிரித்தெடுப்பதன் மூலம் நீர் மேலே (அ) வில் குறிப்பிட்ட சந்தைப்படுத்தல் கலவை மாறி ஒவ்வொன்றுக்குமான உதாரணங்களை எழுதுக. (02 புள்ளிகள்)

(iv) தமது சேமிப்புகளை முதலீடு செய்வதன் மூலம் ரூபன் என்பவர் மூலதன ஆதாயங்களையும், பெருமாள் என்பவர் வட்டி வருமானத்தையும் எதிர்பார்க்கின்றனர்.

(அ) ரூபன் தெரிவு செய்ய வேண்டிய முதலீட்டு மூலங்கள் இரண்டை எழுதுக.

(ஆ) பெருமாள் தெரிவு செய்ய வேண்டிய முதலீட்டு மூலங்கள் இரண்டை எழுதுக. (02 புள்ளிகள்)

(மொத்தம் 08 புள்ளிகள்)

Education கல்வி அதியாபன

4. i.
- திட்டமிடல்
- ஒழுங்கமைத்தல்
- நெறிப்படுத்தல்
- கட்டுப்படுத்தல்

(1/2 × 4= 2 புள்ளிகள்)

ii. அ. பொய்

ஆ. பொய்

இ. உண்மை

ஈ. உண்மை

(1/2 × 4 = 2 புள்ளிகள்)

iii. அ. மாறிகள்
- உற்பத்திப்பொருள்
- மேம்படுத்தல்
- இடம்

(1/2 × 2 = 1 புள்ளி)

| | | |
|---|---|---|
| ஆ. உற்பத்திப்பொருள் | - | புதிய வடிவமைப்பு, ஆபரணம் |
| மேம்படுத்தல் | - | விளம்பர செலவை அதிகரித்தல் |
| இடம் | - | நிகழ்நிலை (Online) |

(1/2 × 2 = 1 புள்ளி)

iv. அ.

- பங்குகளில் முதலீடு செய்தல்
- ஆதனங்களை கொள்வனவு செய்தல்

(காணி கொள்வனவு , தங்க ஆபரணங்களை கொள்வனவு , கட்டடம் கொள்வனவு, மோட்டார் வாகனம் கொள்வனவு)

(1/2 × 2 = 1 புள்ளி)

ஆ.

- நிலையான வைப்பில் முதலீடு செய்தல்
- சேமிப்பு வைப்பில் முதலீடு செய்தல்
- திறைசேரி உண்டியலில் முதலீடு செய்தல்

(1/2 × 2 = 1 புள்ளி)

<table>
<tr><td rowspan="2">Q4</td><td>(i)</td><td colspan="4">(ii)</td><td colspan="2">(iii)</td><td colspan="2">(iv)</td><td rowspan="2">8/8</td></tr>
<tr><td>02</td><td>அ<br>1/2</td><td>ஆ<br>1/2</td><td>இ<br>1/2</td><td>ஈ<br>1/2</td><td>அ<br>01</td><td>ஆ<br>01</td><td>அ<br>01</td><td>ஆ<br>01</td></tr>
</table>



kalvi.lk

## பகுதி II - கணக்கீடு

(இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.)

5. (i) பொறுப்பு ஒன்றின் குணாம்சங்கள் இரண்டு எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) பின்வரும் சொத்துக்கள் நடைமுறைச் சொத்துக்களா அல்லது நடைமுறையல்லாச் சொத்துக்களா எனக் குறிப்பிடுக.

(அ) விற்பனைக்காக கொள்வனவு செய்யப்பட்ட சரக்கிருப்புக்கள்

(ஆ) அலுவலகத் தளபாடங்கள்

(இ) பொறிகளும் உபகரணங்களும்

(ஈ) பெறவேண்டிய வாடகை (02 புள்ளிகள்)

(iii) 01.01.2023 இல் இருந்தவாறு நடேசன் வணிகத்தின் மொத்தச் சொத்துக்கள் ரூ. 200 000 ஆகவும் மொத்தப் பொறுப்புகள் ரூ. 50 000 ஆகவும் இருந்தது. 01.01.2023 இல் இவ் வணிகத்தில் நிகழ்ந்த சில கொடுக்கல்வாங்கல்கள் வருமாறு:

(அ) கடனுக்குக் கொள்வனவு செய்த சரக்குகள் ரூ. 10 000 ஆகும்.

(ஆ) கடன் கொடுத்தோருக்கு செலுத்தியது ரூ. 5 000 ஆகும்.

(இ) கடன் பட்டோரிடமிருந்து பெற்றது ரூ. 15 000 ஆகும்.

(ஈ) காகிதாதி செலவுகள் செலுத்தியது ரூ. 5 000 ஆகும்.

(உ) ரூ. 10 000 கிரயமான பொருட்கள் ரூ. 15 000 இற்கு கடனுக்கு விற்பனை செய்யப்பட்டது.

வேண்டப்படுவது:

(அ) 01.01.2023 இல் இருந்தவாறு மேலே தரப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் எவ்வாறு நடேசன் வணிகத்தின் கணக்கீட்டுச் சமன்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதைக் குறிப்பிடுதல்.

(விடையளிப்பதற்கு கீழே தரப்பட்ட மாதிரியைப் பயன்படுத்துக. உமக்காக முதலாவது கொடுக்கல்வாங்கலின் தாக்கம் தரப்பட்டுள்ளது.)

| கொடுக்கல் வாங்கல் | சொத்துக்கள் (ரூ.) | = உரிமைகள் (ரூ.) | + பொறுப்புக்கள் (ரூ.) |
|---|---|---|---|
| (அ) | + 10 000 (சரக்கிருப்பு) | – | + 10 000 (கடன் கொடுத்தோர்) |
| (ஆ) | | | |
| (இ) | | | |
| (ஈ) | | | |
| (உ) | | | |

(ஆ) மேலே தரப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் பின்னர் 01.01.2023 இல் இருந்தவாறு நடேசன் வணிகத்தின் தொகையுடன் கூடிய கணக்கீட்டுச் சமன்பாடு (04 புள்ளிகள்)

(iv) பின்வருவன சண்முகம் வணிகத்தின் கடன் கொள்வனவுகள் ஆகும்.

| திகதி | பட்டியல் இல. | விநியோகத்தர் | தொகை (ரூ.) |
|---|---|---|---|
| 03.01.2023 | 65 | புனிதன் | 25 000 |
| 10.01.2023 | 123 | அகிலன் | 18 000 |
| 25.01.2023 | 135 | சமீம் | 12 000 |

வேண்டப்படுவது:

(அ) சண்முகம் வணிகத்தின் கொள்வனவு நாளேட்டில் மேலே தரப்பட்ட கொடுக்கல்வாங்கல்களைப் பதிவு செய்தல்.

(ஆ) 31.01.2023 இல் இருந்தவாறு பொருத்தமான பேரேட்டுக் கணக்குகளில் கொள்வனவு நாளேட்டின் கொடுக்கல்வாங்கல்களைப் பதிவு செய்தல் (04 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)



kalvi.lk

**5.** i.
- கடந்த காலக் கொடுக்கல் வாங்கலொன்றின் விளைவாக ஏற்படுதல்
- தீர்ப்பனவின் போது வணிகத்தின் வளங்களிலிருந்து ஒரு பகுதி வெளிச் செல்லல்
- நிகழ்காலக் கடப்பாடு கொண்டதாக இருத்தல்

(1 × 2 = 2 புள்ளிகள்)

ii. அ. நடைமுறைச் சொத்து
ஆ. நடைமுறையல்லாச் சொத்து
இ. நடைமுறையல்லாச் சொத்து
ஈ. நடைமுறைச் சொத்து

(1/2 × 4 = 2 புள்ளிகள்)

iii. அ.

| கொடுக்கல் வாங்கல் | சொத்துக்கள் (ரூ) = | உரிமைகள் (ரூ) + | பொறுப்புக்கள் (ரூ) | |
|---|---|---|---|---|
| (ஆ) | -5000 (காசு) | | -5000 (கடன் கொடுத்தோர்) | 1/2 |
| (இ) | +15000 (காசு)<br>- 15000 (கடன் பட்டோர்) | | | 1/2 |
| (ஈ) | -5000 (காசு) | - 5000 (காகிதாதி செலவுகள்) | | 1/2 |
| (உ) | - 10000 (சரக்கு)<br>+15000 (கடன் பட்டோர்) | +5000 (இலாபம்) | | 1 |

(2 1/2 புள்ளிகள்)

ஆ. சொத்து = உரிமை + பொறுப்பு
205000 (1/2) = 150000 (1/2) + 55000 (1/2)

(1 1/2 புள்ளிகள்)

iv. அ.

கொள்வனவு நாளேடு

| திகதி | பட்டியல் இலக்கம் | விநியோகத்தர் | பெறுமதி ரூபா | | பே.ப |
|---|---|---|---|---|---|
| 03.01.23 | 65 | புனிதன் | 25 000 | 1/2 | |
| 10.01.23 | 123 | அகிலன் | 18 000 | 1/2 | |
| 25.01.23 | 135 | சமீம் | 12 000 | 1/2 | |
| 31.01.23 | | கொள்வனவு கணக்குக்கு மாற்றியது | 55 000 | 1/2 | |

(02 புள்ளிகள்)


kalvi.lk

(ஆ) கொள்வனவு கணக்கு

| திகதி | விபரம் | பே.ப | தொகை | திகதி | விபரம் | பே.ப | தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| 31.01.23 | கடன் கொடுத்தோர் க/கு | | (1/2) 55000 | | | | |

புனிதன் கணக்கு

| திகதி | விபரம் | பே.ப | தொகை | திகதி | விபரம் | பே.ப | தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 03.01.23 | கொள்வனவு க/கு | | 25000 (1/2) |

அகிலன் கணக்கு

| திகதி | விபரம் | பே.ப | தொகை | திகதி | விபரம் | பே.ப | தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 10.01.23 | கொள்வனவு க/கு | | 18000 (1/2) |

சமீம் கணக்கு

| திகதி | விபரம் | பே.ப | தொகை | திகதி | விபரம் | பே.ப | தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 25.01.23 | கொள்வனவு க/கு | | 12000 (1/2) |

(2 புள்ளிகள்)

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | (i) | (ii) | | | | (iii) | | (iv) | | $\frac{12}{12}$ |
| | | அ | ஆ | இ | ஈ | அ | ஆ | அ | ஆ | |
| | 02 | ½ | ½ | ½ | ½ | 2½ | 1½ | 02 | 02 | |



kalvi.lk

6. (i) பின்வரும் ஒவ்வொரு செலவுகளுக்கும் பொருத்தமான உற்பத்திக்கிரய மூலக்கூறினை எழுதுக.
(அ) ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் வடிவமைப்பாளருக்கான கொடுப்பனவு
(ஆ) செங்கல் உற்பத்தி வணிகத்தில் களிமண்ணை கலவை செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட தண்ணீர் செலவுக்கான கொடுப்பனவு (02 புள்ளிகள்)

(ii) நடைமுறைக் கணக்கைப் பேணுபவர்களுக்கு அவர்களது வணிக வங்கிகளால் அனுப்பப்படும் வங்கிக் கூற்றில் உள்ளடங்கியுள்ள நான்கு விடயங்களை எழுதுக. (02 புள்ளிகள்)

(iii) 'சாஜஹான்' புத்தக அச்சகத்தினர் ஜனவரி 2023 இல் சிறுவர்களுக்கான கதைப் புத்தகங்கள் 1000 பிரதிகளை அச்சடிப்பதற்கு கட்டளை ஒன்றைப் பெற்றுக் கொண்டனர். கட்டளையின் பிரகாரம் 31.01.2023 இல் உற்பத்தி நிறைவுக்கு வந்ததுடன் அது தொடர்பாக ஏற்பட்ட செலவுகள் வருமாறு.

| | ரூ. |
|---|---|
| அச்சடித்தற் கடதாசிகள் | 80 000 |
| உற்பத்தி மேற்பார்வையாளர் சம்பளம் | 40 000 |
| அச்சியந்திர இயக்குனர் சம்பளம் | 60 000 |
| பசை, நூல், தீந்தை மற்றும் ஏனைய மூலப்பொருட்கள் | 5 000 |
| அச்சுப் பகுதிக்கான மின்சாரப் பட்டியல் | 15 000 |
| அச்சுப் பகுதிக்கான காவலாளி சம்பளம் | 28 000 |
| ஒரு புத்தகத்திற்கான இறைக் கட்டணம் | 20 |
| அச்சியந்திர திருத்தச் செலவு | 3 000 |
| புதிய அச்சியந்திரக் கொள்வனவு | 150 000 |

* 31.01.2023 இல் இருந்தவாறு மூலப்பொருட் சரக்கிருப்பு எதுவுமில்லை.

வேண்டப்படுவது:
(அ) ஜனவரி 2023 மாதத்திற்கான உற்பத்திக் கிரயக் கூற்றைத் தயாரித்தல்
(ஆ) சிறுவர் கதைப் புத்தகம் ஒன்றிற்கான உற்பத்திக் கிரயத்தைக் கணிப்பிடுதல் (04 புள்ளிகள்)

(iv) 31.03.2023 இல் இருந்தவாறு ஜனனி வணிகத்தின் வங்கிக் கணக்கின் சாதகமான மீதி ரூ. 38 000 ஆகும். அதே நாளில் வங்கிக் கூற்று மீதி ரூ. 21 000 ஆகும். இவ் வித்தியாசத்திற்கான காரணங்கள் பின்வருமாறு :
1. மார்ச் மாதத்தில் வைப்பிலிடப்பட்ட ரூ. 14 000 பெறுமதியான காசோலை வசூலிக்கப்படாமல் இருந்தது.
2. நிலையான கட்டளையாக வங்கிக்கடன் தவணைக் கட்டணம் ரூ. 45 000 வங்கியால் செலுத்தப்பட்டிருந்தது.
3. கடன் கொடுத்தோர் ஒருவருக்கு வழங்கப்பட்ட காசோலை ரூ. 15 000 ஆனது மார்ச் மாதம் வரை கொடுப்பனவுக்காக வங்கியில் சமர்ப்பிக்கப்படவில்லை.
4. வணிகத்தின் வங்கிக் கணக்கில் கடன்பட்டோர் ஒருவரால் நேரடியாக வைப்பிலிடப்பட்ட தொகை ரூ. 27 000 ஆகும்.

வேண்டப்படுவது:
(அ) 31.03.2023 இல் இருந்தவாறு வங்கிக் கணக்கு மீதியைச் செம்மையாக்குதல்
(ஆ) 31.03.2023 இல் இருந்தவாறு வங்கிக் கணக்கு இணக்கக் கூற்றைத் தயாரித்தல் (04 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)


kalvi.lk

6. ( i ) (அ) ஏனைய நேர் கிரயம் (01 புள்ளி)

(ஆ) நேரில் மூலப்பொருள் கிரயம் (01 புள்ளி)

( ii )

- ஆரம்ப மீதி
- வங்கியில் வரவு வைக்கப்பட்ட விடயங்கள்
- வங்கியில் செலவு வைக்கப்பட்ட விடயங்கள்
- இறுதி மீதி
- நேரடி வைப்பு
- காசு வைப்பு
- காசோலை வைப்பு
- காசோலை மூலமான கொடுப்பனவுகள்
- காசோலைப் புத்தக கட்டணம்
- வங்கிக் கட்டணம்
- வங்கி வட்டி
- நிலையியற் கட்டளை கொடுப்பனவுகள்

( ½ x 4 = 02 புள்ளிகள் )

(iii) (அ) உற்பத்திக் கிரயக் கூற்று

| மூலக்கிரயம் | ரூபா | ரூபா |
|---|---|---|
| அச்சடித்தல் கடதாசிகள் | 80000 | |
| அச்சு இயந்திர இயக்குனர் சம்பளம் | 60000 | |
| இறை கட்டணம் (20 X 1000) | 20000 (1/2) | |
| | ---------- | |
| மேந்தலை கிரயம் | | 160000 (1/2) |
| பசை நூல் தீந்தை மற்றும் ஏனைய மூலப்பொருட்கள் | * 5000 | |
| உற்பத்தி மேற்பார்வையாளர் சம்பளம் | * 40000 | |
| காவலாளி சம்பளம் | * 28000 | |
| மின்சாரம் | * 15000 | |
| அச்சியந்திர திருத்தம் | * 3000 | 91000 |
| | ---------- | |
| மொத்த உற்பத்தி கிரயம் (1/2) | | 251000 (1/2) |

( * ஐந்து விடயங்களுக்கு 01 புள்ளி * 03 / 04விடயங்களுக்கு ½ புள்ளி வீதம் வழங்கப்படும்)

(03 புள்ளிகள் )

(ஆ) சிறுவர் கதைப் புத்தகம் ஒன்றிக்கான உற்பத்திக்கிரயம் ரூபா 251 01 புள்ளி

அல்லது

(1/2) 251000

----------

1000 (1/2)

(04 புள்ளிகள்)



kalvi.lk

(iv) (அ) வங்கிக் கணக்கு

| திகதி | விபரம் | பே.ப | தொகை ரூபா | திகதி | விபரம் | பே.ப | தொகை ரூபா |
|---|---|---|---|---|---|---|---|
| 31.03.23 | மீ.கீ.கொ.வ | | 38000 (1/2) | | வங்கிக் கடன் தவணைக்கட்டணம் | | 45000 (1/2) |
| | நேரடி வைப்பு | | 27000 (1/2) | 31. 03. 23 | மீ.கீ.கொ.செ | | 20000 (1/2) |
| | | | 65000 | | | | 65000 |
| 01.04.23 | மீ.கீ.கொ.வ | | 20000 | | | | |

(02 புள்ளிகள்)

(ஆ) ஜனனி வணிகத்தின் 31.03.2023 இல் இருந்தவாறு

வங்கி கணக்கு இணக்கக் கூற்று

| | ரூபா | ரூபா |
|---|---|---|
| திருத்திய வங்கிக் கணக்கு மீதி 31.03.2023 இல் | | (1/2) 20000 |
| (+)சமர்ப்பிக்கபடாத காசோலை | 15000 | 15000 (1/2) |
| | | 35000 |
| (-) வசூலிக்கப்படாத காசோலை | 14000 | (14000) (1/2) |
| 31.03.2023 இல் வங்கிக் கூற்றின்படி வங்கி மீதி (1/2) | | 21000 |

(02 புள்ளிகள் )

| Q 6 | i | | ii | iii | | iv | | Total |
|---|---|---|---|---|---|---|---|---|
| | அ | ஆ | 02 | அ | ஆ | அ | ஆ | 12 |
| | 01 | 01 | | 03 | 01 | 02 | 02 | 12 |



kalvi.lk

7. (i) இலாப நோக்கற்ற நிறுவனங்களால் தயாரிக்கப்படும் பெறுவனவு கொடுப்பனவுக் கணக்கிற்கும் வருமானச் செலவுக் கணக்கிற்கும் இடையே காணப்படும் இரண்டு வித்தியாசங்களை எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) ஐக்கிய சிறுவர் சங்கத்தின் அங்கத்தவர் மொத்த எண்ணிக்கை 250 ஆகும். அங்கத்தவர் ஒருவருக்கான மாதாந்த அங்கத்துவக் கட்டணம் ரூ. 50 ஆகும். 20 அங்கத்தவர் நீங்கலாக 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அங்கத்துவக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது.

வேண்டப்படுவது:

(அ) பெறுவனவு கொடுப்பனவுக் கணக்கில் உள்ளடங்கியுள்ள 2022 ஆம் ஆண்டுக்கான அங்கத்துவக் கட்டணத் தொகை

(ஆ) 31.12.2022 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானச் செலவு கணக்கில் பதிவு செய்யப்பட்ட அங்கத்துவக் கட்டணத் தொகை (02 புள்ளிகள்)

(iii) 31.12.2022 இல் இருந்தவாறு ஆதியா சில்லறை வணிகத்தில் இருந்து பிரித்தெடுத்த பரீட்சை மீதி வருமாறு.

| | வரவு (ரூ.) | செலவு (ரூ.) |
|---|---|---|
| கொள்வனவுகள் | 360 000 | |
| விற்பனைகள் | | 538 000 |
| தளபாடங்களும் உபகரணங்களும் | 180 000 | |
| சரக்கிருப்பு (01.01.2022 இல்) | 80 000 | |
| வங்கிக் கடன் 8% | | 100 000 |
| மின்சாரக் கட்டணங்கள் | 12 000 | |
| உள்வந்த வண்டிக் கூலி | 18 000 | |
| விநியோகச் செலவுகள் | 6 000 | |
| கட்டட வாடகை | 20 000 | |
| வங்கிக் கட்டணங்கள் | 2 200 | |
| கடன்பட்டோர் | 70 000 | |
| கடன் கொடுத்தோர் | | 50 000 |
| காசு மீதி | 45 000 | |
| வங்கி மேலதிகப் பற்று | | 12 000 |
| செலுத்திய வங்கி மேலதிகப் பற்று வட்டி | 500 | |
| விளம்பரப்படுத்தல் செலவுகள் | 6 300 | |
| இயந்திரங்கள் | 200 000 | |
| மூலதனம் | | 300 000 |
| | 1 000 000 | 1 000 000 |

மேலதிக தகவல்கள்:

- 31.12.2022 இல் இருந்தவாறு முடிவுக் கையிருப்பு ரூ. 48 000 ஆகும்.
- இயந்திரங்களுக்கு நேர்கோட்டு முறையில் வருடாந்தம் 10% பெறுமானத் தேய்வு செய்யப்படல் வேண்டும்.
- 31.12.2022 இல் இருந்தவாறு சென்மதி மின்சாரக் கட்டணங்கள் ரூ. 2 000 ஆகும்.

வேண்டப்படுவது :

(அ) 31.12.2022 இல் முடிவடைந்த ஆண்டுக்கான ஆதியா வணிகத்தின் வியாபார இலாப நட்டக் கணக்கு (04 புள்ளிகள்)

(ஆ) 31.12.2022 இல் இருந்தவாறான ஆதியா வணிகத்தின் நிதி நிலைமைக் கூற்று (04 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

***



kalvi.lk

7. (i)

| பெறுவனவு கொடுப்பனவுக் கணக்கு | வருமான செலவுக் கணக்கு |
|---|---|
| • காசேட்டின் சுருக்கத்ததை ஒத்திருக்கும் | • இலாப நட்டக் கணக்கை ஒத்திருக்கும். |
| • காசுப் பெறுவனவுகள் கொடுப்பனவுகள் பதியப்படும். | • வருமானங்கள் மற்றும் செலவுகள் மாத்திரம் பதியப்படும். |
| • மூலதன மற்றும் வருமான இயல்பு கொண்ட பெற்ற வருமானங்கள் மற்றும் கொடுத்த செலவினங்கள் பதிவு செய்யப்படும். | • வருமான இயல்பு கொண்ட ஆண்டுக்குறிய வருமானங்கள் மற்றும் செலவுகள் மாத்திரம் பதிவு செய்யப்படும். |
| • கணக்காண்டின் முடிவில் இறுதி காசு மீதியைக் காட்டும். | • இறுதி மீதி வருமான மிகையினை அல்லது வருமான குறைவினைக் காட்டும். |
| • காசு அடிப்படையில் தயார் செய்யப்படும். | • அட்டுறு அடிப்படையில் தயார் செய்யப்படும். |

( 1 x 2 = 02 புள்ளிகள் )

(i)

(அ) ரூபா. 138 000 (01 புள்ளி)

230 x 600 = 138 000
(1/2) (1/2)

(ஆ) ரூபா. 150 000

250 x 600 = 150 000
(1/2) (1/2)

(01 புள்ளி)



kalvi.lk

iii (அ)

ஆதியா சில்லறை வணிகத்தின்
31.12.2022 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வியாபார இலாப நட்ட கணக்கு (½)

| | ரூபா. | ரூபா. | | ரூபா. | ரூபா. |
|---|---|---|---|---|---|
| 01/01/2022 சரக்கிருப்பு | | 80000 | விற்பனை | | 538000 |
| கொள்வனவு | 360000 | | | | |
| + உள்வந்த வண்டி கூலி | 18000 | 378000 | | | |
| விற்க தயாராக இருந்த சரக்கின் பெறுமதி | | 458000 | | | |
| - 31/12/22 இல் சரக்கிருப்பு | | (48000) (½) | | | |
| விற்பனைக் கிரயம் | | 410000 (½) | | | |
| மொத்த இலாபம் கீ.கொ.செ | | 128000 | | | |
| | | 538000 | | | 538000 |
| விநியோகச் செலவுகள் | | | மொத்த இலாபம் கீ.கொ.வ | | 128000 (½) |
| விநியோகச் செலவுகள் | 6000 | | | | |
| விளம்பரச் செலவுகள் | 6300 | 12300 | | | |
| நிருவாகச் செலவுகள் | | | | | |
| மின்சார கட்டணங்கள் | 14000 (½) | | | | |
| இயந்திர பெறுமானத் தேய்வு | 20000 (½) | | | | |
| கட்டட வாடகை | 20000 | 54000 | | | |
| **நிதிச் செலவுகள்** | | | | | |
| வங்கிக் கடன் வட்டி | 8000 (½) | | | | |
| வங்கிக் கட்டணங்கள் | 2200 | | | | |
| வங்கி மேலதிகப் பற்று வட்டி | 500 | 10700 | | | |
| **தேறிய இலாபம்** மூலதனக் கணக்குக்கு மாற்றியது | | **51000** (½) | | | |
| | | 128000 | | | 128000 |

(04 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

(ஆ)

**ஆதியா சில்லறை வணிகத்தின் ½**
**31.12.2022 இல் உள்ளவாறான ஐந்தொகை**

| | ரூபா. | ரூபா. | | கொள்விலை ரூபா. | திரண்ட பெறுமதி ரூபா. | இறுதி பெறுமதி ரூபா. |
|---|---|---|---|---|---|---|
| மூலதனம் | | 300000 | **நடைமுறை அல்லாத சொத்து** | | | |
| + தேறிய இலாபம் | ½ | 51000 | | | | |
| | | 351000 | தளப்பாடங்களும் உபகரணங்களும் | 180000 | - | 180000 |
| | | | இயந்திரங்கள் | 200000 | 20000 ½ | 180000 |
| **நடைமுறை அல்லாத பொறுப்பு** | | | | 380000 | 20000 | ½ 360000 |
| 8% வங்கிக் கடன் | | 100000 | | | | |
| **நடைமுறைப் பொறுப்பு** | | | **நடைமுறைச் சொத்து** | | | |
| கடன் கொடுத்தோர் | 50000 | | சரக்கிருப்பு. | | 48000 ½ | |
| அட்டுறு வங்கிக் கடன் வட்டி | 8000 ½ | | கடன்பட்டோர் | | 70000 | |
| சென்மதி மின்சார கட்டணம் | 2000 ½ | | காசு. | | 45000 | 163000 |
| வங்கி மேலதிகப் பற்று | 12000 | 72000 | | | | |
| | | 523000 | | | | 523000 |

(04 புள்ளிகள்)

| Q 7 | (i) | (ii) | | (iii) | | 12 |
|---|---|---|---|---|---|---|
| | | அ | ஆ | அ | ஆ | 12 |
| | 02 | 01 | 01 | 04 | 04 | 12 |



kalvi.lk

(iii) (அ)

ஆதியா சில்லறை வணிகத்தின்
31.12.2022 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாப நட்டக் கூற்று (½)

| | தொகை ரூபா | தொகை ரூபா | தொகை ரூபா |
|---|---|---|---|
| விற்பனை | | | 800000 |
| **கழி : விற்பனைக் கிரயம்** | | | |
| 01.01.2022 இல் சரக்கிருப்பு | | 80000 | |
| கொள்வனவு | | 360000 | |
| உள்வந்த வண்டிக் கூலி | | 18000 | |
| விற்க தயாராக இருந்த சரக்கின் பெறுமதி | | 458000 | |
| கழி : 31/12/2022 இல் சரக்கிருப்பு | | (48000) (½) | |
| விற்பனைக் கிரயம் | | | (410000) (½) |
| மொத்த இலாபம் | | | 128000 (½) |
| **விநியோக செலவுகள்** | | | |
| விநியோக செலவுகள் | 6000 | | |
| விளம்பர செலவுகள் | 6300 | 12300 | |
| **நிருவாகச் செலவுகள்** | | | |
| மின்வாரக் கட்டணம் | 14000 (½) | | |
| இயந்திர பெறுமானத் தேய்வு | 20000 (½) | | |
| கட்டட வாடகை | 20000 | 54000 | |
| **நிதியும் ஏனைய செலவுகளும்** | | | |
| வங்கிக் கடன் வட்டி | 8000 (½) | | |
| வங்கிக் கட்டணங்கள் | 2200 | | |
| வங்கி மேலதிகப் பற்று வட்டி | 500 | 10700 | (77000) |
| தேறிய இலாபம் மூலதனக் கணக்குக்கு மாற்றியது | | | 51000 (½) |

(04 புள்ளிகள்)



kalvi.lk

(ஆ) ஆதியா சில்லறை வணிகத்தின் ½
31.12.2022 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று ½

| | கிரயம் ரூபா | திரண்ட பெ.தே ரூபா | தேறிய பெறுமதி ரூபா |
|---|---|---|---|
| **நடைமுறை அல்லாத சொத்து** | | | |
| தளப்பாடங்களும் உபகரணங்களும் | 180000 | - | 180000 |
| இயந்திரங்கள் | 200000 | 20000 ½ | 180000 |
| | 380000 | 20000 | ½ 360000 |
| **நடைமுறை சொத்து** | | | |
| சரக்கிருப்பு | | 48000 ½ | |
| கடன் பட்டோர் | | 70000 | |
| காசு | | 45000 | 163000 |
| மொத்த சொத்துக்கள் | | | 523000 |
| **உரிமையாண்மை** | | | |
| மூலதனம் | | 300000 | |
| + தேறிய இலாபம் | ½ | 51000 | 351000 |
| நடைமுறையல்லாப் பொறுப்பு | | | |
| 8% வங்கிக் கடன் | | | 100000 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | | |
| கடன் கொடுத்தோர் | | 50000 | |
| அட்டுறு வங்கிக் கடன் வட்டி | | 8000 ½ | |
| சென்மதி மின்சாரக் கட்டணம் | | 2000 ½ | |
| வங்கி மேலதிகப் பற்று | | 12000 | 72000 |
| மொத்த உரிமையாண்மையும் பொறுப்பும் | | | 523000 |

(04 புள்ளிகள்)

| | (i) | (ii) | | (iii) | | |
|---|---|---|---|---|---|---|
| Q 7 | | அ | ஆ | அ | ஆ | 12 |
| | 02 | 01 | 01 | 04 | 04 | 12 |

Education கல்வி අධ්‍යාපන

# GRADE 6-11

STUDY WITH US..!

# ICT ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by

**Pathmanathan Pathmaraj**

(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**

**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி

Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page